# யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
## முதலாம் தவணைப் பரீட்சை - 2015
## தமிழ்மொழியும் இலக்கியமும்

| தரம் :- 10 | சுட்டெண் ........................................ | நேரம்:- 3 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ❖ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01) புல்லர் நல்லோரை அறியார் - இதில் புல்லர் என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்
1) மல்லர் 2) அறிவுள்ளோர் 3) அறிவில்லோர் 4) கள்வர்

02) வீரன் கேண்மை கூரம்பாகும் - இதில் கேண்மை என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்
1) பகைமை 2) நட்பு 3) தொடர்பு 4) சினம்

03) இன்சொல் பேசுவது நற்பண்புகளுள் ஒன்றாகும். இன்சொல் என்பதன் எதிர்ப்பொருட் சொல்
1) நல்லசொல் 2) தீமைதரும் சொல் 3) வாய்ச்சொல் 4) வன்சொல்

04) வேடனிடம் அகப்பட்ட மான் அஞ்சியது. வேடன் என்பதன் எதிர்ப்பாற் சொல்
1) வேடுவச்சி 2) வேடச்சி 3) வேடுச்சி 4) வேடுவிச்சி

05) கணினிகள் இயங்கியது. இவ்வாக்கியத்திலுள்ள வழு
1) பால்வழு 2) எண்வழு 3) இடவழு 4) மரபுவழு

06) மலையகச் சமூகம் பயன்படுத்தாத சொல்
1) கறடி 2) ஸ்ரோர் 3) மடுவம் 4) வெரசா

07) முத்தினது கூட்டம் குவியல் என்பது போல புகையிலையின் கூட்டம்
1) கற்றை 2) கும்பல் 3) சிப்பம் 4) சிற்பம்

08) ஆடு மேய்ப்பவன் ஆயன் என்பது போல கப்பல் செலுத்துபவன்
1) பீகாமன் 2) பாகன் 3) சாரதி 4) வலவன்

09) ஆயுள் முழுவதும் பிரமச்சரியம் காத்து வாழ்பவன்
1) தபுதாரன் 2) தேவராளன் 3) நாத்திகன் 4) நைட்டிகன்

10) நாகரீகம் என்ற வழுச் சொல்லின் திருத்தமான வடிவம்
1) நாகரிகம் 2) நவீனம் 3) நாகர்இகம் 4) நளினம்

11) தேநீரை மடமட என அருந்தினர். இதில் மட மட என்பது
1) அடுக்குமொழி 2) அடுக்கிடுக்கு மொழி
3) இணைமொழி 4) இரட்டைக் கிழவி

12) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற பழமொழியின் பொருள்
1) அடம்பன் கொடி பருமனானது
2) அடம்பன் கொடி வலிமையானது
3) ஒற்றுமை பலம் தரும்
4) தனித்திருப்பது அழகன்று


kalvi.lk

13) தீமை செய்வோர் துன்புறுவோர் என்ற கருத்தைத் தரும் பழமொழி

1) கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகாது

2) இளங்கன்று பயமறியாது

3) ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்

4) அடாது செய்பவர் படாது படுவர்

14) அடியொற்றுதல் என்ற மரபுத் தொடரின் பொருள்

1) அடியடித்தல்

2) பின்பற்றுதல்

3) பாதங்களை வணங்குதல்

4) அடிபிடித்தல்

15) பயனற்ற செயலைக் குறிக்கும் உவமைத்தொடர்

1) ஆலை வாய்ப்பட்ட கரும்பு போல

2) ஆப்பிழுத்த குரங்கு போல

3) உமி குற்றிக் கை சலித்தாற் போல

4) இளவு காத்த கிளி போல

16) எழுபத்தைந்தாவது நிறைவு விழா

1) அமுத விழா 2) பவள விழா 3) முத்து விழா 4) பொன் விழா

➢ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

17) கண்டான் என்பதிலுள்ள பகுதிச் சொல்

1) காண் 2) கண் 3) கண்டு 4) கண்ட

18) மூன்றாம் வேற்றுமைக்குரிய கலப்புறு பொருள் தரும் வாக்கியம்

1) மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான்

2) அன்போடு பேசினர்

3) இவ்வளவோடு நிறுத்திக் கொள்கின்றேன்

4) பாலோடு தண்ணீர் கலந்தான்

19) பின்வருவனவற்றுள் எதிர்மறை இடைநிலை

1) கின்று 2) வ் 3) ஆ 4) த்

20) ஆழ்க தீயதெல்லாம் என்பதில் ஆழ்க என்பது

1) வியங்கோள் வினை

2) செய்வினை

3) பிறவினை

4) ஏவல் வினை

21) வானுயர்ந்த சோலையிலே - இதில் வந்த அணி

1) உவமையணி

2) தற்குறிப்பேற்ற அணி

3) உயர்வு நவிற்சியணி

4) உருவக அணி

22) பவளவாய் என்பது

1) வேற்றுமைத் தொகை

2) வினைத்தொகை

3) உம்மைத் தொகை

4) உவமைத் தொகை

23) விழாவிற்கு எல்லோரும் வந்தனர் - இதில் உம் இடைச்சொல் தரும் பொருள்

1) முற்று 2) தெரிநிலை 3) எண் 4) ஐயம்



kalvi.lk

24) ஆலயம் தொழுவது சாலவும் நன்று - இதில் வந்துள்ள உரிச்சொல்

1) தொழுவது 2) ஆலயம் 3) நன்று 4) சால

25) பின்னை என்பதன் திருத்தமான வடிவம்

1) பின் 2) பிறகு 3) பின்னர் 4) பின்னால

➤ **பின்வரும் வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியினைத் தெரிவு செய்க**

26) அந்தப் படத்தில் வந்த ஒவ்வொரு பாடலும்

1) இனிமையானவை 2) இனிமையானதுகள்

3) இனிமையானது 4) இனிமையுள்ளன

27) கண்ணன் நன்றாகப் படித்ததனால் அன்றோ பரீட்சையில்

1) சித்தியடைவான் 2) சித்தியடைந்திருப்பான்

3) சித்தியடைந்தான் 4) சித்தி பெறலாம்

28) பின்வருவனவற்றில் சரியான சொற்கூட்டத்தை தெரிவு செய்க

1) ஊறணி, எண்ணெய், எழவு

2) கோடரி, சமையல், சுகவீனம்

3) கைமாத்து, குண்டுமணி, கிணத்தடி

4) காச்சல், வாழ்க்கை, இளனி

29) போதைவஸ்துக்களை பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பற்றி மாணவரிடையே ........................................ மேற்கொள்ளப்படவேண்டும்

1) பிரசுரம் 2) பிரசாரம் 3) பிரகாரம் 4) பிரகடனம்

30) பின்வருவனவற்றை ஒழுங்குபடுத்தும்போது கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) மொழி இதற்கு விதிவிலக்கல்ல

ஆ) மாற்றமும் வளர்ச்சியும் ஒரு நிகழ்ச்சியின் இரு அம்சங்களாகும்

இ) அதனால் தொடர்ந்து வளர்ச்சியடைகின்றன

ஈ) வாழும் மொழிகளெல்லாம் இடையறாது மாற்றத்துக்கு உள்ளாகின்றன

உ) மாறாத எதுவும் வளர்ச்சியடைவதில்லை.

1) ஆ, இ, ஈ, அ, உ 2) உ, ஈ, இ, அ, ஆ

3) உ, அ, ஈ, இ, ஆ 4) ஆ, ஈ, அ, இ, உ

(1 × 30 = 30 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01) தமிழ்ப் பாடத்தில் நீர் மேற்கொண்ட செய்ம்முறை எனும் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

i) இக்கணிப்பீடு எந்த அலகில் மேற்கொள்ளப்பட்டது?

ii) இதற்கான நியதிகள் எவை எனக் கூறுக.

iii) இக்கணிப்பீட்டை மேற்கொள்ள ஆசிரியர் வழங்கிய அறிவுரை யாது?

iv) இக்கணிப்பீட்டுச் செயற்பாட்டால் கிடைத்த நன்மைகள் இரண்டு தருக.

(4 × 3 = 12 புள்ளிகள்)

02) சுருக்கமான விடை தருக.

i) தொழில்முறைக் கடிதத்தில் இடம்பெறும் உறுப்புக்கள் எவை?

ii) கலை, கழை ஆகிய சொற்களை வைத்து கருத்துப் புலப்படுமாறு வாக்கியங்கள் எழுதுக.

iii) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
வானுறவோங்கி வளம்பெ றவளரினும்

iv) திரிகடுகம் என்ற நூலைப் பாடியவர் யார்?

v) நாலடியார் சிறந்த நட்பாக கூறுவது எது? ஏன்? (5 × 2 = 1 புள்ளிகள்)

03) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 200 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்கு பொருத்தமான தலைப்பு இடுக.

i) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் ஓர் அங்கமே இணையத்தளமும் செல்லிடத் தொலைபேசியுமாகும். இவற்றால் நாம் நன்மைகள் பெறும் வேளையில் தீமைகளும் பெறப்படுகின்றன. இவற்றைக் கருத்திற் கொண்டு இருவருக்கிடையில் இடம்பெறும் ஓர் உரையாடல்.

ii) கல்விச் செல்வம் தலையாயது கற்றவர்கள் கற்றபடி வழி காட்டினால் இளம் சமுதாயம் தம்மை உயர் நெறியில் இட்டுச் செல்ல வாய்ப்பாகும். ஆண் கல்வி பொருளாதாரத்தை வளப்படுத்த பெண் கல்வி நாட்டையும் வீட்டையும் வளப்படுத்தும். இதனை அடிப்படையாகக் கொண்டு விளக்கக் கட்டுரை.

iii) மாணவ சமுதாயம் ஓய்வு நேரத்தை பெரும்பாலும் தொலைக்காட்சியிலும் கணினியிலும் செலவிடுகின்றனர். இதனைக் குறைத்து சமய சமூகத் தொண்டுகளில் ஈடுபடும் போது நாட்டுக்கு நற்பிரசைகள் உருவாக வாய்ப்புக்கள் கிடைக்கும் என்பது பற்றி ஒரு சொற்பொழிவு

iv) பூரணி அரவிந்தனின் தங்கை. சிறுவயதில் பெற்றோரை அவர்கள் இழந்து விட்டனர். அரவிந்தனே பூரணிக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து அவளை வளர்த்தான். அவள் படித்துப் பட்டம், பதவி பெற்று சிறந்த சமூகத் தொண்டாற்ற வேண்டுமென்பதே அரவிந்தனது விருப்பம். ஆனால் அவனது இலட்சியக் கனவிற்கு தடைகள் பல குறுக்கிட்டன.......... அரவிந்தனது கனவு நனவானதா? இக்கருவை அடிப்படையாகக் கொண்டு ஒரு கற்பனைச் சிறுகதை

(15 புள்ளிகள்)

04) கற்றலில் ஆர்வமில்லாத உமது நண்பனுக்கு கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி 75 சொற்களில் அமையுமாறு கடிதம் ஒன்று எழுதுக. (08 புள்ளிகள்)

05) கீழே தரப்பட்ட உரைப்பகுதியை 15 - 20 சொற்களில் அமையுமாறு சுருக்கி எழுதுக.

நாம் இலக்கியங்களைப் படிக்கிறோம். அங்கே என்ன காண்கிறோம்? இலட்சியங்களைக் காண்கிறோம். இலட்சியங்களைக் கடைப்பிடித்தொழுகிய இலக்கியவாதிகளைக் காண்கிறோம். எதிர்மறை முகத்தால் இலட்சிய வாழ்வினை உயிர்பெறச் செய்த ஏனையோரையும் காண்கிறோம். நிறைவுடைய கதாபாத்திரங்களும், குறையுடைய கதாபாத்திரங்களும் நம்மை இலட்சியமென்கின்ற குறிக்கோளை நோக்கிச் செலுத்துவதை இலட்சியங்கள் வாயிலாக உணர்கிறோம். இந்த உணர்வு நம்மிடையே பிறவாத போது நாம் இலக்கியங்களைக் கொண்டு இடர்படுவோமேயன்றி, இன்பம் காண்பதில்லை. இலக்கியத்திறவு கோலை நாம் பெறுதல் வேண்டும். பெற்றால் இன்பம் காண்போம்.

(05 புள்ளிகள்)

06) பின்வரும் செய்யுள் உரைப்பகுதி ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அடிக்கோடிட்ட பகுதிகளின் சிறப்புக்களை எழுதுக.

i) யானை அனையவர் நண்பொரீஇ நாயனையர்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் <u>எறிந்தவேல்</u>
<u>மெய்யதா வால் குழைக்கும் நாய்</u>

ii) <u>கைவேல்; எறிகிறவேல்; இறகுள்ள; அம்பு இல்லாத அம்பு வாள், சக்கரம் இவற்றுக்கு மேலே தெய்வப் படைகளிலும் கை வைக்கின்ற சமயம்!</u> அந்தச் சமயம் பிறிற்றோ கட்சிக்குப் பேசவந்தவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள் வாதம் இல்லாத இடத்திலும் வாதம் வருவிக்கக் கூடியவர்கள். (10 புள்ளிகள்)

07) நீதிப்பாடல்கள் பாடப்பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

i) உருவத்தைக் கொண்டு அளவிடுதலாகாது

ii) இருவகை நட்பு - நாயினது நட்பின் சிறப்பு

iii) இனியவை நாற்பது பாடலில் கூறப்படும் இனிதான செயல்களை குறிப்பிடுக.

அல்லது

08) பாரதியார் சுயசரிதையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

i) ஒருவர் தாம் விரும்பும் நலன்களைப் பெற எவ்வாறு முயற்சி செய்யவேண்டுமென பாரதி கூறுகிறார்?

ii) விரும்பியதை அடைய முடியாததற்கான காரணங்களாகப் பாரதி எவற்றைக் குறிப்பிடுகின்றார்?

iii) இவரது பாடல்களை எப்பிரிவுகளில் அடைக்கலாம்? (10 புள்ளிகள்)


kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
**075 287 1457**